[23rd August 1960

Sri N. MAHALINGAM: தவறான போலி மருந்துகளை விற்பவர்களுக்கு கொடுக்கப்படுகிற தண்டனை மிகவும் குறைவாக இருக்கிறது. பாலில் தண்ணீர் கலப்பவர்களுக்கே ஆயிரக்கணக்கான ரூபாய் அபராதமும், ஜெயில் தண்டனையும் இருக்கிறபோது—போலி மருந்துகளை விற்பவர்களுக்கும் அதிகமான—கடுமையான தண்டனை அளிக்க அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: பாலில் தண்ணீர் கலப்பவர்களுக்கும் ஆரம்பத்தில் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று தான் அபராதம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அதுபோலவே இதுவும் வளரும்.

Trade Unions

* **405 Q.—Sri P. G. MANICKAM:** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஒரு தொழில் நடத்தும் ஸ்தாபனத்திலே ஒரு தொழிலாளர் சங்கத்துக்கு மாத்திரம் ரெஜிஸ்ட்ரேஷன் செய்துகொள்ள அனுமதி கொடுப்பது பற்றி சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதா?

(ஆ) அப்படியானால் விவரங்கள் யாவை?

The Hon. Sri R. VENKATARAMAN: *Clauses (a) and (b).*—The question of placing restrictions on the number of unions to be registered in an industry or undertaking was considered at the 17th Indian Labour Conference held at Madras during July 1959. The consensus of opinion was not in favour of placing any statutory restrictions on the number of unions that might be registered. This Government have accepted the above views of the Conference.

Sri P. G. MANICKAM: தொழிற்சங்கங்களிலே தொழிலாளர்களே நிர்வாகஸ்தர்களாக இருக்கவேண்டும் என்றும், தனிப்பட்டவர்கள் நிர்வாகஸ்தர்களாக இருக்கக்கூடாது என்றும் சட்டம் இயற்றுவதுபற்றி யூனியன் சர்க்கார் நம் சர்க்காருக்கு எதாவது தாக்கீது அனுப்பியிருக்கிறதா? அப்படியிருந்தால் அதன் விவரம் யாது?

The Hon. Sri R. VENKATARAMAN: மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு அதைப்பற்றி எதுவும் எழுதவில்லை.

Water-supply to the City of Madras

* **406 Q.—Sri S. M. ANNAMALAI:** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

சென்னை நகரில் ஒரு ஆளுக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

23rd August 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : The Corporation of Madras is at present supplying about 32 to 33 million gallons per day, which works out to about 20 gallons per head. To augment the existing supply, a scheme for bringing the Cauvery waters to Madras is under investigation and the possibility of utilizing the waters of Pennar in Andhra Pradesh is also being examined. Certain short-term measures to augment the supply, namely, carrying water from Poondi and Cholavaram in closed pipes and acquisition of irrigation rights under Cholavaram and other sources are also under consideration.

SRI S. M. ANNAMALAI : நபர் ஒன்றுக்குத் தேவையான தண்ணீர் எவ்வளவு? தொழிற்சாலைக்குச் சப்ளை செய்யப்பட்ட தண்ணீர் போக மீதம் உள்ள தண்ணீரில் ஒரு நபருக்கு சென்னை நகரத்தில் எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : சராசரி கணக்குப் போட்டு நபர் ஒன்றுக்கு 20 காலன் என்று சொன்னேன். மற்ற இடத்தில் தலைக்கு ஐந்து, பத்து காலன்தான் இருக்கிறது. இங்கே 20 காலன் என்பது அதிகமாகத்தான் இருக்கிறது. இன்னும் அதிகமாகத் தண்ணீர் தேவையாக இருக்கிறது. அதற்காகத்தான் இரண்டு மூன்று வழிகளிலே எப்படித் தண்ணீரை அதிகப்படுத்துவது என்று பார்க்கிறோம்.

SRI S. M. ANNAMALAI : சுகாதார முறைப்படி ஒரு ஆளுக்குத் தேவையான தண்ணீர் எவ்வளவு?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது எப்படி? ஒரு ஆள் ஒரு நாளைக்கு இரண்டு வேளை குளிக்கிறான். இன்னொருவன் இரண்டுநாள்வட்டம் குளிக்கிறான். ஒரு வாரத்திற்கு ஒரு தடவை கூடக் குளிக்காதவர்கள் இருக்கிறார்கள். (சிரிப்பு).

SRI A. A. RASHEED : Sir, what are the steps that the Government have taken to remove non-vegetarian stuff like fish and other things from the water.

THE HON. SRI M. A. MANICKAVELU : There are filters, mechanical filters. So when we take the water actually it is taken without any non-vegetarian stuff.

Compulsory Elementary Education

***408 Q.—SRI P. G. MANICKAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ம் வருஷத்திலே 6 முதல் 7 வயதடைந்த சிறுவர் சிறுமிகளுக்குக் கட்டாயக் கல்வி அளிப்பதற்காக எத்தனை பிளாக்குகள் தேர்ந்து எடுக்கப்பட்டிருக்கின்றன?

(ஆ) எத்தனை சிறுவர்களுக்கும், சிறுமியர்களுக்கும் கட்டாயக் கல்வி அளிக்கப்படும்?

(இ) எத்தனை உபாத்தியாயர்கள் அதிகப்படியாக நியமிக்கப்படுவார்கள்?